கல்குடா கல்வி வலய வனநிலையப் பரீட்சைச் சபை

பயிற்சிப் பரீட்சை கூ.பொ.த (இ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I	நேரம்: 2மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி – I
எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

✷ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. தொடர்பாளன் ஒருவன் தொடர்பாடலில் ஈடுபடும் நபராதல் எவ் வகைத் தொடர்பாடலுள் உள்ளடங்கும்
1. ஆளுள் தொடர்பு 2. குழுத் தொடர்பு 3. ஆளிடைத் தொடர்பு
4. வெகுஜனத் தொடர்பு 5. மேற்கூறிய அனைத்தும்

02. அரசாங்கத்தைப் போன்று ஊடகங்களும் சமூகப் பொறுப்புடன் தொடர்பாடல் செயற்பாடுகளையும், ஊடகங்களின் செயற்பாடுகளையும் கையாள வேண்டும். என்பதனை வலியுறுத்தும் கோட்பாட்டு வகை
1. ஆதிக்க தொடர்பாடல் எண்ணக்கரு
2. சோவியத் சமவுடமை எண்ணக்கரு
3. சமூகப் பொறுப்பு தொடர்பாடல் எண்ணக்கரு
4. ஜனநாயக சமவுடமை எண்ணக்கரு
5. அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு

03. சுதந்திரம், சமத்துவம், உரிமை என்பவற்றுடன் தொடர்புடைய தொடர்பாடல் எண்ணக்கரு
1. ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு
2. ஆதிக்க தொடர்பாடல் எண்ணக்கரு
3. சமூக பொறுப்பு தொடர்பாடல் எண்ணக்கரு
4. அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு
5. சோவியத் சமவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு

04. எழுத்துமொழி உருவாகிய சமூக கட்டமைப்பு?
1. நவீன சமூகம் 2. அடிமைச் சமூகம் 3. முதலாளித்துவ சமூகம்
4. வேளாண்மை சமூகம் 5. மானிய சமூகம்

05. பெப்பிரஸ் பாய் எழுத்து மூல சாதனமாக பயன்படுத்தப்பட்டது?
1. யப்பான் 2. எகிப்து 3. சீனா 4. இந்தியா 5. பிரான்ஸ்

06. தொடர்பாடலின் இயல்பாக கொள்ள முடியாதது?
1. ஒருவழி, இருவழி செயன்முறைக்குட்பட்டது.
2. உயிர் வாழ்வின் இயற்கையான ஓர் தொழிற்பாடு
3. தனி மனித உணர்வுகளை வெளிப்படுத்துதல்
4. தொடர்பாடல் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாறுபடாதது.
5. தொடர்பு ஊடக சமூக கூட்டிணைவு, சகவாழ்வை உருவாக்குதல்.

www.keou.lk

07. விழிப்புணர்வு மிக்க பெறுநர் எனப்படுவோர்?
    1. ஊடக உள்ளடக்கங்களை பகுப்பாய்விற்கு உட்படுத்தாதோர்.
    2. உள்ளடக்க விடயங்களை பகுப்பாய்வு செய்து ஆய்விற்கு உட்படுத்துவோர்.
    3. விமர்சன ரீதியான திறன் அற்றோர்.
    4. தகவலை விசாரணை செய்து கிரகித்தலில் ஈடுபடாதோர்.
    5. ஊடக உள்ளடக்கங்களின் உண்மை நிலையினை ஆய்ந்தறியாதோர்.

08. உடல்சார் போக்கினால் தகவல் கிடைப்பதில் ஏற்படுகின்ற நிலை தடையினில் உள்ளடங்கம் வகை.
    1. உடல் தடை 2. உளத்தடை 3. சூழல் தடை
    4. மொழித்தடை 5. கருவிசார் தடை

09. செய்தியை அனுப்புவர் - செய்தியைப் பெறுபவர் என்ற இரு பகுதிக்குமான இருவழித் தொடர்பு மாதிரி?
    1. ஹரல் டீ லாஸ்வெல் மாதிரி 2. சேனோன் மற்றும் வீபர் மாதிரி
    3. பர்லோ மாதிரி 4. அரிஸ்ரோட்டில் மாதிரி
    5. ஓங்குஸ்ட் மற்றும் ஸராம மாதிரி

10. குறித்த கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒன்று கூடுகின்ற குழுவை எவ்வாறு குறிப்பிடுவர்?
    1. கற்றல் குழு 2. கொள்னைக் குழு 3. செயற்படு குழு
    4. தெரிவு செய்த குழு 5. எழுமாறான குழு

11. கவர்ச்சிகரமான பேச்சு, சிறந்த மொழியாற்றல், பல்வகைத் திறன்கள், அனைவரையும் சமமாக மதித்தல் என்பன தொடர்புபட்டமைவது?
    1. ஆளிடைத் தொடர்பு 2. கூட்டுத் தொடர்பு 3. அகமுகித் தொடர்பு
    4. வெகுஜனத் தொடர்பு 5. சமூகத் தொடர்பு

✷ **"கீழ் குறிப்பிடப்படும் ஐந்து வினாக்களுக்கும் குறித்த மாதிரியுருவைப் பயன்படுத்துக"**



12. மேற்கூறப்பட்ட தொடர்பு மாதிரியில் C எனக் குறிப்பிடப்படுவது?
    1. தொடர்பாடுனர் 2. பெறுனர் 3. தகவல் 4. தாக்கம் 5. ஊடகம்

13. கமல் நாளை கண்டி புறப்படும் வேளை தமது நவீன கையடக்கப் பேசியை நான் எடுத்து வருவதாக நிமலிடம் கூறினான். இங்கு நவீன கைபேசி என்பது?
    1. அச்சு ஊடகம் 2. சமூக ஊடகம் 3. இலத்திரனியல் ஊடகம்
    4. நவீன ஊடகம் 5. ஆரம்ப ஊடகம்

14. வாசகர், நேயர், பார்வையாளர் என வகைப்படுத்தப்படும் விடயம் உள்ளடங்கும் பகுதி.
    1. A 2. D 3. C 4. B 5. E

15. தகவல் மூலாதாரத்தில் இருந்து உருவாக்கம் பெறும் பகுதியை உள்ளடக்கிய உறுப்பு?
    1. B 2. A 3. E 4. C 5. D

16. E எனக் குறிப்பிடப்படும் பகுதியை உயர்வடையச் செய்ய தொடர்பாடுநரால் மேற்கொள்ளப்படக்கூடிய சிறந்த விடயம்?
    1. பின்னூட்டல் 2. தடை 3. தாக்கம் 4. தகவல் 5. பெறுகை

www.ikdu.lk

17. தொடர்பாடல் கற்கைத் துறையில் புதிதாக இணைந்துள்ள ‘‘இணைப்பு’’ என்பதனால் பொருள் கொள்ளப்படுவது யாது?
1. தனியான பார்வை 2. பார்வைக் குவிவு 3. ஒன்றாகச் சந்தித்தல்
4. பார்வை தொடர்ச்சி 5. மீளளித்தல் நிலை

18. தொடர்பாளனிடம் இருந்து பெறுநர் வரைக்கும் செல்லும் செய்தியைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாடலில் அழைக்கப்படுவது
1. வாயிற்காப்போன் எண்ணக்கரு 2. காப்பாளன் கரு
3. காத்தல் செயற்படி 4. உயிரோட்ட முறையியல்
5. தூண்டி – துலங்கல் எண்ணக்கரு

19. ஆட்களுக்கிடையிலான தூர அடிப்படையில் வாய்மொழியல்லா தொடர்பாடலின் சமூகக் காரணிகளின் வகைகள் நேச இடைவெளித் தூரமாக வகைப்படுத்தப்படுவது?
1. 12-18M 2. 35-40M 3. 15-20cm 4. 30-60cm 5. 4-20cm

20. முறையாக திட்டமிடப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான முறைசார் முறையில் அமைந்த தொடர்பாடலில் காணக் கிடைக்காதது?
1. ஒழுங்கான கட்டுக்கோப்புக்குரிய வகையில் இடம்பெறல்
2. நேர முகாமைக்குரிய வகையிலும் தலைமைத்துவத்தின் கட்டளைக்கும் ஏற்ப செயற்படாமை
3. அனைவரது கருத்துக்களும் கேட்டறியப்படல், மதிப்பளித்தல்
4. நெகிழ்ச்சிப் போக்குத் தன்மையும் சட்ட ரீதியிலான தொடர்பாடல் தன்மையும் உடையது.
5. தகவல் திரிபடைதல் மற்றும் தவறான விளக்கம் ஏற்படாமை.

21. தொடர்பாடல் செயன்முறைக்கு மானிட வாழ்க்கை பரம்பரையாக இசைவாக்கமடைந்திருத்தல்.
1. கீழைத்தேயப் பண்பாட்டில் 3. மேலைத்தேயப் பண்பாட்டில்
3. புராதன பண்பாட்டில் 4. உலகளாவிய பண்பாட்டில்
5. மத்திய ஐரோப்பியப் பண்பாட்டில்

22. ‘‘நான் எனது எண்ணக்கை நிச்சயமாக எதிர்க்கிறேன். ஆனால நீ அந்த எண்ணக்கில் கொண்டிப்பதற்கான உரிமைக்காக நான் உண்மையாக முன்வருவேன். இக்கூற்றில் வெளிப்படுவது.
1. ஐக்கியத்தின் தேவை 2. சகோதரத்தின் பெறுமதி
3. கருத்து வேறுபாட்டின் முக்கியத்துவம் 4. ஆழ்பரிவு
5. நியாயமான உரிமை

23. ஆன்மீக கலாசாரத்தில் இடம்பெறாதது
1. சமயம் 2. புராதன இலக்கியம் 3. அரசியல்
4. கலை 5. தத்துவம்

24. தகவல்கள் உள்ள சமூகத்தில் வாழும் நபர் நிரந்தரமாக வெகுசன ஊடகங்கள் ஊடாக பிரசுரிக்கப்படும் பல்வேறு செய்திகளுக்கு முகங்கொடுப்பார். அச் செய்தியினை நன்றாக விளங்கிக் கொள்வதற்கும், வரைவிலக்கணப்படுத்துவதற்கும் உதவும் ஆற்றல்.
1. ஊடக மீள்வார்ப்பு 2. ஊடகப் பகுப்பாய்வு 3. ஊடக எழுத்தறிவு
4. ஊடக விமர்சனம் 5. ஊடக புலக்காட்சி

25. பிரபல்யமான கலாசாரம் பற்றிய பகுப்பாய்வில் பிரதானமாகக் கவனஞ் செலுத்தப்படாதது.
1. கலாசார ஆக்கத்துறை 2. அளவறிதுறை
3. மேலாதிக்க எண்ணக்கருத்துரை 4. பொதுமக்கள் பண்பாட்டுத்துறை
5. அழகியல் துறை

www.lkedu.lk

26. நவீனமயப்படுத்தல் செயன்முறையில் சில மக்கள் கூட்டத்தினரின் கலாசார விழுமியங்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொள்ள வேண்டியது.
    1. கலை ரூபமான முறையிலாகும்.
    2. மக்களின் கலாசார இசைவாக்கத்தின் தோற்றத்திலாகும்.
    3. பாரம்பரியங்களின் நற்காப்பிலாகும்.
    4. சமூக கலாசாரப் படைப்பின் அடிப்படையிலாகும்.
    5. புராண சார்பான சடங்கு முறைமைகளிலாகும்.

27. ''அபிவிருத்தி'' பற்றி பொதுமையான வழிகள் இல்லை. ஒவ்வொரு நாடும் நமது நாட்டுக்கு உகந்த தந்திரோபாயங்களை கொண்டுள்ளன. இக்கூற்றுக்கு ஏற்ப அபிவிருத்தியடையும் நாடு ஒன்றின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பயன்படுத்த முடியாதது எவை?
    1. நவீனமயமாக்கல்
    2. நகரமயமாக்கல்
    3. கைத்தொழில் மயமாக்கல்
    4. மேலைத்தேய நாகரிகமயமாக்கல்
    5. ஆழ்பிரிவு

28. நாடோடிக் கதை வல்லுனர்களுக்கேற்ப நாட்டுக் கவிதைகளினூடாகச் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களை கற்க முடியும். அதனைச் சிறப்பாக வெளிக்காட்டும் கற்கைத் துறை
    1. அரசியல் விஞ்ஞானம்
    2. வரலாறு
    3. உளவியல்
    4. மானுடவியல்
    5. உயிரியல்

29. செவிமடுத்தல் செயன்முறை என்பது
    1. செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளல், மதிப்பிடுதல், துலங்கல்
    2. விளங்கிக்கொள்ளல், செவிமடுத்தல், மதிப்பிடுதல், முலங்கல்
    3. செவிமடுத்தல், மதிப்பிடுதல், விளங்கிக்கொள்ளல், துலங்கல்
    4. விளங்கிக்கொள்ளல், செவிமடுத்தல், துலங்கல், மதிப்பிடுதல்
    5. செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளல், துலங்கல், மதிப்பிடுதல்

30. வலுவான சமூகமொன்றில் வாண்மையாளர்களினால் உருவாக்கப்பட்ட கலாசாரமாக இருக்கக்கூடியது.
    1. பல்லின மக்கள் கலாசாரம்
    2. வெகுசன கலாசாரம்
    3. பண்டைய உயர் கலாசாரம்
    4. பிரமுகர் கலாசாரம்
    5. இனக்கலாசாரம்

31. உலகில் எந்த இடத்திலும் இடம்பெறும் சம்பவத்தை விபரிக்கும் ஆற்றல் மனிதனிடம் உண்டு. இதற்குக் காரணம்
    1. தன்னிச்சையும், படைப்பாற்றலும் ஆகும்
    2. தன்னிச்சையும் இருமையும் ஆகும்.
    3. தன்னிச்சையும் தூரமிகுதியான நெருங்கிய ஒப்புமையும் ஆகும்.
    4. விசேட கவனமும் இருமையும் காணும்.
    5. தூர மிகுதியான ஒப்புமையும் இருமையும் ஆகும்.

32. உள்நாட்டு தொடர்பாடல் அறிவுப் புலமையின் மீது முதன்மை பெறும் விடயம்?
    1. உள்நாட்டச் சிந்தனை
    2. புலக்காட்சி
    3. பிரதிநிதித்துவம்
    4. தொடர்பாடல்
    5. காட்சித் தொகுப்பு

33. தொடர்பாடல் செயற்பாடு ஒன்று முழுமை பெறும் சந்தர்ப்பம் கொள்ளக் கூடியது?
    1. தகவலால்
    2. மின்னூட்டத்தால்
    3. தடையால்
    4. விளைவால்
    5. கடத்தல்

www.ksu.lk

34. உலகமயமாக்கல் செயன்முறைசார்தும் அதிவிரைவுத் தன்மையுடையதாகவும் நபர்களுக்கு தகவல் கிடைக்கப்பெறும் வழிமுறை.
1. வெகுசன ஊடகம் 2. செவிப்புல ஊடகம் 3. நவீன ஊடகம்
4. இலத்திரனியல் ஊடகம் 5. கட்புல செவிப்புல ஊடகம்

35. சமூக மயமாக்கல் செயன்முறையில் சில இலட்சிய வாதிகளின் நடத்தையினை தன் வசமாக்கிக் கொள்ளும் அடிப்படை செயன்முறை?
1. இனம்காணல் 2. வதிபாசமேற்றல் 3. போலச் செய்தல்
4. பின்பற்றுதல் 5. நிலைத்து இருத்தல்

36. நீங்கள் நாவலொன்றை வாசிக்கின்றீர்கள் அதன் அடிப்படை அம்சங்களின் தொடர் வரிசை யாது?
1. தொடர்பாடுபவர் → நூல் பதிப்பாளர் → பெறுநர்
2. தொடர்பாடுபவர் → செய்தி → பெறுநபர்
3. பதிப்பாளர் → செய்தி → பெறுநபர்
4. தொடர்பாடுபவர் → ஊடகவழி → செய்தி
5. பெறுநர் → தகவல் → ஊடகம்

37. புகையிரத நிலையமொன்றின் புகையிரத்துக்காக காத்திருக்கும் பயணிகள் குழுவொன்றினிடையே நடைபெறக் கூடிய தொடர்பாடல்?
1. ஆட்களிடைத் தொடர்பாடல் 2. முறைசார் தொடர்பாடல்
3. அளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல் 4. முறைசாரத் தொடர்பாடல்
5. சமூகத் தொடர்பாடல்

38. ரோகா ஒரு வானொலி அறிவிப்பாளர் அவரது தொழிலுடன் மிகத் தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்?
1. முறைசார் தொடர்பாடல் 2. வெகுசனத் தொடர்பாடல்
3. செவிப்புலத் தொடர்பாடல் 4. வாய்மொழித் தொடர்பாடல்
5. கட்புலத் தொடர்பாடல்

39. இலங்கையிலுள்ள ஊடக உரிமையாண்மையின் இரண்டு முக்கிய வகைகள் யாவை?
1. அரசாங்கம் மற்றும் தனியார்
2. அரசாங்கம் மற்றும் பகுதியளவு அரசுடைமைச் சேவை
3. கம்பனிகள் மற்றும் தனியாட்கள்
4. குடும்பங்கள் மற்றும் அரசாங்கம்
5. சமூகம் மற்றும் குடும்பம்

40. சிறுவர்களுக்கான தொலைக்காட்சி நாடகமொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த சீதா அந்த நாடகத்தில் நடித்த சிறுவனும் தனது சகோதரனும் ஒரே முகச் சாயலைக் கொண்டிருந்ததாக உணர்ந்தாள். இவ்வாறு உணர்வதற்குக் காரணமான தொடர்பாடல் வகை?
1. வெகுசனத் தொடர்பாடல் 2. அளுள் அல்லது அறிமுகத் தொடர்பாடல்
3. காட்சித் தொடர்பாடல் 4. ஆட்களிடைத் தொடர்பாடல்
5. புலனுணர்வுத் தொடர்பாடல்

41. மிக முக்கியமான தகவல் முதலில் வெளிப்படுத்துவது?
1. வன்செய்தி அறிக்கையிடலில் ஆகும். 2. மென் செய்தி அறிக்கையிடலில் ஆகும்.
3. புலனாய்வு அறிக்கையிடலில் ஆகும். 4. படைப்பாக்க அறிக்கையிடலில் ஆகும்.
5. தூய அறிக்கையிடல் ஆகும்.

www.ikeduk

42. வறுமை அறிவு ஞானத்தின் கீழ்மட்டம் தொழிலின்மை மற்றும் சமூக சமமின்மை முதலான துன்பங்களில் இருந்து அபிவிருத்தி அடையும் நாடுகளின் மக்களை மிட்டல் அபிவிருத்தி எனக் கூறியவர்?
1. போல் பீஸ்பீவன் 2. டட்ளி சியர்ஸ் 3. விமல் திசாநாயக்க
4. சில்பர் ஸ்ஷாம் 5. எம் ரோஜர்ஸ்

43. சமுதாயத்தின் அனைத்து பகுதிகளிலும் சமூகவாத மெய்யறிவை வளர்ப்பதன் ஊடாக அபிவிருத்தி முயற்சியை ஆரம்பித்த நாடு?
1. ரஷ்யா 2. சீனா 3. யப்பான் 4. கனடா 5. அமெரிக்கா

44. நோக்கம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுகூடும் குழு
1. கற்றல் குழு 2. எழுமாறான குழு 3. செயற்பாட்டுக் குழு
4. கொள்கைக்குழு 5. தெரிவுக்குழு

45. பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடலையும் ஊடக சுதந்திரத்தையும் அரசு பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறும் தொடர்பாடல் எண்ணக்கரு?
1. சுதந்திர தொடர்பாடல் எண்ணக்கரு
2. அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு
3. ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு
4. சோவியத் சமவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு
5. அதிகார வாத தொடர்பாடல் எண்ணக்கரு

46. தகவல் பெற்றுக் கொள்ளும் சூழலுடன் தொடர்புடைய அம்சமாக கருதப்பட கூறியவர்.
1. கட்டுப்பாடு 2. வாயிற் காப்போன் 3. சூழல்
4. பழக்கவழக்கம் 5. நடத்தை

47. செய்தியை பெற்றுக் கொள்வோன் அதற்கான துலங்கலைச் செலுத்துவான். இச் செயன்முறையுடன் தொடர்புடையது.
1. கடத்தல் 2. விளைவு 3. பின்னூட்டல் 4. தடை 5. தாக்கம்

48. பல்வேறு வழிமுறைகளினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட அச் செய்தியை இன்னுமொரு நபருக்கு வழங்க முயற்சித்தல் அல்லது எண்ணுதல்.
1. குழு தொடர்பு 2. வெகுசனத் தொடர்பு 3. ஆளிடைத் தொடர்பு
4. முறைசார் தொடர்பு 5. அகமுகித் தொடர்பு

49. சுயபார்வை, சுய எண்ணக்கரு போன்ற விடயங்கள் தொடர்புபடுவது
1. இருவர் உரையாடும் போது
2. தன்னைத் தானே உணர்ந்து கொள்ளும் போது
3. குழுவாக இணையும் போது
4. பிரிந்து செயற்படும் போது
5. கூட்டுத் தொடர்பின் போது

50. சமூகம் ஒன்றில் காணப்படக்கூடிய இருவகைப் பிரிப்பு அடிப்படைகள்
1. தகவல், மற்றும் செய்தி 2. இன அடிப்படை, முயற்சி அடிப்படை
3. மூலம் மற்றும் மூலாதாரம் 4. தடை மற்றும் பின்னூட்டல்
5. ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு

www.ikedu.lk

கல்குடா கல்வி வலய வனநிலையப் பரீட்சைச் சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (உ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

(01) 1. ''கற்றல்'' என்பதனை வரையறை செய்து அதன் இயல்புகள் நான்கினை குறிப்பிடுக.
2. கற்றல் தொடர்பான இரு பிரதான கோட்பாடுகளை குறிப்பிட்டு அவற்றில் உள்ளடக்கப்படுகின்ற பிரதான இரு கற்றல் விதிகளை எடுத்தக்காட்டி சுருக்கமாக விளக்குக.
3. குறித்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றி கொள்வதற்காக நிகழ்கின்ற கருத்து வெளிப்பாடு அல்லது பரிமாற்றம் பயனுள்ள பேச்சு ஆகும். பயனுள்ள பேச்சு ஒன்றில் நீர் அவதானிக்கக்கூடிய நான்கு இயல்புகளை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக.
4. ஒன்றாக கருமமாற்றும் மனிதர் குழு கூட்டம் குழுவாக செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் நான்கினை குறிப்பிட்டு ஒன்றை பற்றி விளக்குக.

(02) 1. நல்லதொரு தொடர்பியலாளர் நல்லதொரு செவிமடுப்பவராவார். செவிமடுத்தலின் நான்கு முக்கிய கட்டங்களை தருக.
2. சுய எண்ணக்கரு (Self-concept) தொடர்பாடலுடன் இயற்கையாகவே இரண்டற கலந்திருக்கின்றது. சுய எண்ணக்கரு என்னவென்பதனை சுருக்கமாக விபரிக்க.
3. நன்நயம் செய்தல் (courtesy) நல்லதொரு தொடர்பாடலினட ஓர் இயல்பாகும். பின்வருவனவற்றுள் ஆளிடை தொடர்பாடலில் அவ்வாறான நற்பண்புகள் தவறும் சந்தர்ப்பங்களுக்கு இரண்டு (உ-ம்) தருக.
   அ. தொடர்பியலாளர்
   ஆ. செய்தி
   இ. செய்தியை பெறுபவர்
4. பண்பாட்டு பரிமாற்றலுக்கு (Cultural Exchange) தொடர்பாடல் அடிப்படையானது. பண்பாட்டு பரிமாற்றம் நடைபெறும் நான்கு முக்கிய வழிமுறைகளை அவற்றுக்கான உதாரணங்களுடன் விபரிக்க.

(03) 1. பிரபல்யம் மிக்க கலாசாரத்தின் நான்கு அடிப்படை இயல்புகளைக் குறிப்பிடுக.
2. விளம்பரத்தின் மூலம் சமூகத்திற்கு கிடைக்கும் நான்கு பயன்களை சுருக்கமாக விளக்குக.
3. மொழியை தொலைக்காட்சி ஊடகத்திற்கு பயன்படுத்தும்போது கவனஞ்செலுத்த வேண்டிய மூன்று அடிப்படை இயல்புகளை விளக்குக.
4. தகவல் வழங்கும் பணியின் முக்கியத்துவம் பற்றி நான்கு காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.

(04) 1. தொடர்பாடல் பற்றிய வில்பர் ஷ்ராமின் வரைவிலக்கணத்தை தருக.
2. i. சமூகமயமாதலில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு நிறுவனங்களைப் பெயரிடுக.
   ii. பிள்ளைகளின் சமூகமயமாதலில் தொலைக்காட்சி ஊடகம் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை சுருக்கமாக விபரிக்குக.
3. நிறுவனமொன்றில் பொதுசன தொடர்பை பேணுவதில் பயன்படுத்தக்கூடிய புதிய ஊடக வழிமுறைகள் மூன்றை (உ-ம்) களுடன் விளக்குக.
4. பூகோளமயமாதல் எண்ணக்கருவுடன் தொடர்புடைய நான்கு அம்சங்களின் அடிப்படையிலான கட்டுரை ஒன்றை எழுதுக.

(05) 1. அகமுகி தொடர்பாடலின் நான்கு இயல்புகளை பெயரிடுக.

www.kedu.lk

2. ஊடக பண்பாட்டின் நான்கு இயல்புகளை பெயரிட்டு அவற்றுள் ஒன்றை சுருக்கமாக விபரிக்குக.
3. திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி ஊடகத்திற்குமான இயல்புகள் மூன்றை ஒப்பீட்டடிப்படையில் விபரிக்குக.
4. தற்போதைய ஊடக செயன்முறையில் தணிக்கையின் செயற்பாடு தொடர்பில் நான்கில் வழிமுறைகளை (உ-ம்) களுடன் விளக்குக.

(06)
1. ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் நான்கினைப் பெயரிடுக.
2. வானொலி ஊடகத்தில் மொழியை கையாளும்போது அவசியம் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் நான்கை குறிப்பிட்டு இரண்டை சுருக்கமாக விபரிக்குக.
3. பிரசித்தமான பண்பாட்டின் நான்கு அடிப்படை இயல்புகளை பெயரிட்டு அவற்றுள் இரண்டைச் சுருக்கமாக விபரிக்குக.
4. உலகமயமாக்கல் சமூகத்தில் கொண்டுள்ள தாக்கம் பற்றிய நான்கு விடயங்களை (உ-ம்) களுடன் விபரிக்குக.

(07) ஆரம்பகால சமூகங்களின் தகவல் அறிதலானது நவீன சமூகங்களிலிருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது.
1. தனிநபர் ஒருவருக்கு தகவல் அறிதலானது நவீன சமூகங்களிலிருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது.
2. செய்தி என்பதற்கு போல் டி மெசுனியர் அவர்களால் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்தை குறிப்பிடுக.
3. தகவல் செய்தி இரண்டினையும் வரைவிலக்கணப்படுத்தி தகவலுக்கும், செய்திக்கும் இடையிலான வேறுபாட்டினை குறிப்பிடுக.
4. தகவல் பெற்றுக் கொள்வதற்காக நீர் பயன்படுத்தும் நான்கு நுட்பங்களை எடுத்துக் கூறி இரண்டினை ஆராய்க.

(08) வேறுவகை மாதிரிகளின் அடிப்படையிலே தகவலானது பிரயாணம் செய்வது கண்டறியப்பட்டுள்ளது.
1. மாதிரியின் பயன்பாடுகள் மூன்று தருக.
2. ஹரல் டீ லாஸ்வெல மாதிரியை படம் வரைந்து பெயரிட்டு தாக்கம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
3. ஓங்குஸ்ட் மற்றும் ஸ்ராம் மாதிரிக்கும் பர்லோவின் மாதிரிக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துக.
4. இருபடிப்போக்கு மாதிரியினை படம் வரைந்து பெயரிட்டு அதில் வரும் கருத்துருவாக்கத் தலைவரின் இயல்புகள் பற்றி ஆராய்க.

(09)
1. ஏற்றுக்கொண்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் தொடர்பாடலின் இயல்புகள் நான்கினை குறிப்பிடுக.
2. ஆளிடைத் தொடர்பாடல் என்றால் யாது எனக் கூறி அதன் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. குழுத் தொடர்பாடலின் குழுவினைக் கட்டுப்படுத்தும் உத்திகள் ஆறினைக் குறிப்பிட்டு இரண்டினை சுருக்கமாக விளக்குக.
4. வெகுஜனத் தொடர்பாடலின் இயல்புகளை பட்டியற்படுத்துக.

(10) தொடர்பாடல் செயற்பாடு ஒன்று பல்வகை கூறுகளின் ஒன்றிணைப்பின் பால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.
1. தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகள் ஏழு குறிப்பிடுக.
2. ஊடகங்களைப் பொறுத்து பெறுநர்களை வகைப்படுத்தி செயற்படு பெறுநரின் இயல்புகள் நான்கினைத் தருக.
3. ஆரம்ப காலத்தில் இருந்து தற்காலம் வரையுள்ள ஊடக வளர்ச்சி பற்றி குறிப்பிடுக. (படிமுறை ரீதியாக
4. தொடர்பாடலில் தடையானது எவ்வகையாக பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

www.kdu.lk